# அநீதியை அகற்ற தாய்மார்கள் அறப்போர் தொடுக்க வேண்டும்

Phone No 4502
விலை அரை அணு

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணதுரை M.A.

MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 ] சென்னை (15—4—50) வெளியூர் (16—4—50) [ இதழ் 225

## பெண்களை ஏன் இழிவுபடுத்துகிறீர்கள்?

## சீர்திருத்தம் பெண்களுக்கே தேவை

## அம்பேத்காரின் ஆக்கவேலைகளை அலட்சியப்படுத்துவதேன்?

### பெண்கள் மாநாட்டில் இராமாமிர்தத்தம்மையார் தலைமையுரை

[கோகலே மண்டபத்தில் நடந்த பெண்கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய மூவாலூர் ராமாமிர்தத்தம்மையார் ஆற்றிய சொற்பொழிவாவது:—]

தோழியர்களே, தாய்மார்களே!

40 ஆண்டு காலமாகப் பெண்கள் சீர்திருத்தத்துக்காகப் பாடுபட்டு வருகிறேன். ஆனால் பெண்கள் மாநாட்டுக்குத் தலைமை தாங்கும் இப்பொழுது அடைவதைப்போல என்றும் அவ்வளவு பெருமகிழ்ச்சியடைந்ததில்லை.

இந்தச் சட்டம் பெண்கள் சமூகத்தின் முன்னேற்றத்துக்காகக் கொண்டுவரப்பட்டது. தேவையானால். கிளர்ச்சி செய்யுங்கள் இன்றேல் சொல்லிவிடுங்கள்; நானாவது ஓய்வு எடுத்துக்கொள்கிறேன். சீர்திருத்தம் நமக்குப் புதியதல்ல. சீர்திருத்தம் வேண்டுமா, வேண்டாமா, ஜாதி ஒழிய வேண்டுமா, வேண்டாமா என்பதெல்லாம் பேசப்பட வேண்டுவனதானா?

மதம் நன்மைக்கே இருக்க வேண்டும். அந்த நன்மை நமக்கு இந்து மதத்தால் இருக்கிறதா? ஊருக்குப் பிழைக்க வந்தவர்களே! உங்களுக்கு நாங்கள் செய்த அநீதி தான் என்ன? பெண்களாகிய எங்களை முன்னேறுதபடி ஏன் நீங்கள் செய்துவைத்தீர்கள்.

"சேலை கட்டிய மாதரை நம்பினால்நடுத்தெருவில்நின்று தவிப்பரே" என்று கூறுகிறீர்களே, நாங்கள் வேட்டிக் கட்டிக்கொண்டால் என்ன செய்வீர்கள். சுயமரியாதைக் கட்சி, திராவிடக் கட்சி ஆகியவற்றில உழைத்து இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தில் உழைக்க ஈடுபட்டுள்ளேன். சீர்திருத்தம் இன்று பெண்களுக்குத்தான் அதிகம் தேவை. ஆகையால், பெண்ணுரிமைக்கு ஆதரவு காட்டும் கட்சியையே பெண் சமூகம் ஆதரிக்கவேண்டும். கடவுளின் பேரால் நம்நாட்டுப் பெண்களைத் தாசிப்பெண்களாக்கினார். தாசிப் பெண்கள் என்று தனியாகப் பிறந்திருந்தால, நமக்கு ஆட்சேபம் இல்லை. 32 லட்சணம் பொருந்தியஒரு பெண் தேவதாசியாகப்பட வாள். அதாவது கோயிலுக்காகத் தாலிகட்டிக்கொள்ள வேண்டும், இவள், கடவுள் என்று சொல்லப்படும் கல்லுக்கு நிர்வாணமாகப் பூஜை செய்யவேண்டும், நிர்வாணமாக நாட்டியமாடவேண்டும்.

இச்சார்த்தம் வந்தால், பார்ப்பனனைத்தான் இச்சிக்கவேண்டும். இதைத் தடுக்கவேண்டும். தேவதாசிகள் என்று ஒரு சமூகம்இருக்கக்கூடாதென்றுநாங்கள் கிளர்ச்சி செய்தோம். பெண் சமுதாயத்தின் முற்போக்குக்காப் பாடுபட்ட டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி தலைமையில் ஆவேசத்தோடு பேசினும். ஆதரவு கிடைத்தது. தேவதாசி ஒழிப்பு மசோதா கொண்டு வந்தார்கள்.

அறிவாளி, அரசியல்வாதி, பெரிய தியாகி என்று கூறப்படும் தோழர் சத்யமூர்த்தி விபசாரம் இருக்க வேண்டுமென்று கூறினார். தேவதாசி மசோதாவைப்பற்றி ஆராய நியமிக்கப்பட்டசெலக்ட்கமிட்டியில் தோழர் சத்யமூர்த்தியும் ஒரு அங்கத்தினராக இருந்தார். என்னை அபிப்பிராயம் தெரிவிக்கச் செலக்ட் கமிட்டி கூப்பிட்டது. என்னைத் தோழர் சத்யமூர்த்தி கேட்டார் "காமர்களுக்குக் கர்மக் கிழத்திவேண்டாமா?" என்று. தனியாகச் ஜாதி தேவையில்லை, அழகாக இருக்கின்ற ஜாதிக்குப் பத்துபெண்களை தேவதாசிகள் ஆக்குங்கள் என்றேன். கேட்ட கேள்விக்குத் தான் பதில் தரவேண்டுமென்று என்னை வாயடைக்க வைத்தார் சத்யமூர்த்தி! எவ்வளவோ எதிர்ப்புக்கிடையில் தேவதாசி ஒழிப்பு மசோதா சட்டமாக்கப்பட்டது.

எங்கள் வீட்டுச் சொத்தை எங்களுக்குக் கொடுக்கிறேன் என்று கூறுகிறார்; அதற்காகச் சட்டமியற்றுகிறேன் என்று கூறுகிறார் டாக்டர் அம்பேதகார். இதை எதிர்க்கிறாய். கலப்பு விவாகம் நாங்கள் செய்துகொள்வதை மட்டும் ஏன் தடுக்கிறீர்கள்? பரதநாட்டியத்தை வளர்ப்பதாகக் கூறும் ருக்மணி, அருண்டேல் என்னும் வெள்ளைக்காரரை மணந்துகொண்டாள். தாழ்த்தப்பட்டோர் என்று கூறப்படும் டாக்டர். அம்பேத்காரை மற்றொரு பிராமணச்சி மணந்து கொண்டாள் ஏன் இதை நீங்கள் தடுக்கவில்லை. புகையிலை போடும் மனிதன் மிருகமாகப்பிறப்பான் என்று சட்டத்தில் எழுதி வைத்திருக்கிறீர்கள். எந்தப் பிராமணன் போடவில்லை புகையிலை. பிராமணர் உச்சிகுடுமி வைத்திருக்க வேண்டுமென்று சாத்தி

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

## பால்டிக்கரை பிரதேசங்களை பலப்படுத்தப்படுகிறது

லண்டன், ஏப். 14—

சமீபத்தில் நடைபெற்ற ரஷ்ய யு. எஸ். விமானச் சண்டை தகராறு மூலம், பால்டிக் கடற்கரைப் பிரதேசத்தைப் பலப்படுத்த ரஷ்யா முஸ்தீபு செய்து வருகிறதென்பது திட்டமாக வெளியாகிவிட்டது.

பால்டிக்கரையில் நூற்றுக்கணக்கான கமல் பிரதேசங்களில் ஊடுரும் நிழையாதபடி செய்து முஸ்தீபுகளை ரஷ்யா பலப்படுத்தி வருவதாக லண்டன் பத்திரிகை செய்தி ஒன்று கூறுகிறது.

மெமல் என்ற இடத்தில் சுமார் 200 சப் மரீன்களை ரஷியா வைத்திருக்கிறதென்றும், ஸ்டாடினில் கப்பல் கட்டும் தளங்களை ஏற்படுத்தியிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

## திபேத், படை திரட்டுகிறது

### கத்தியும் ஈட்டியும் உபயோகிக்கப்படுமாம்

லண்டன், ஏப். 14—

திபேத்தில் இவ்வருஷத்துடன் அமைதிகுலையும் என்று 'ஆரகிள்' ஜோஸ்யம் கூறியிருப்பதாலும்; கிழக்கு மேற்கு எல்லையில் செஞ்சீனாவின் ராணுவ முஸ்தீபுகள் பலமாக இருப்பதாலும், திபேத் சர்க்கார் அவசரமாகப் படை திரட்டி யுத்த சன்னத்தமாகி வருகிறது என்று லாஸாவிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

12000 துருப்புகளைத் திபேத்சர்க்கார் ஒரு லக்ஷம் துருப்புகளாக அதிகரித்திருக்கிறதாம். குடும்பத்திற்கு ஒருவர் படையில் சேர வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டே படை அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

திபேத் சரித்திரத்திலேயே இல்லாத அளவுக்கு ராணுவத்திற்காக அதிகப் பணம்பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

நவீன தளவாடங்கள் போதிய அளவுக்கு இல்லாததால், ஈட்டிகள் பட்டாக்கத்திகள் முதலியவைகளும் இப்போது உபயோகத்திற்கு வந்திருக்கின்றன.

காஷ்மீரை எயாட்டியுள்ள திபேத் வடமேற்கு எல்லையில் ஆபத்தான நிலைமை இருந்து வருவதாகக் கூறப்படுகிறது. இப்பகுதியில் கிழக்கு துருக்கிஸ்தானிலுள்ள ரஷ்யர்கள் மூன்று விமான நிலையங்களையும், சில மலைக்கோட்டைகளையும் சீன கம்யூனிஸ்டுகளிடம் ஒப்படைத்திருக்கிறார்களாம்.

## இது உண்மையா?

திருவண்ணாமலை ரமணர் தம் வசமுள்ள சொத்துக்கள் அனைத்தையும், தமது தம்பி மகன் "வெங்குட்டு"விற்கு உயில் எழுதிவைத்துவிட்டதாகவும் ரமணரின் உண்மைச் சீடர்களில் ஒருவரான திரு. ஓமாந்தூர் இராமசாமியார் இது கண்டு உளம் நொந்து தமது குருவின் செயல் கூடாத செயல் என்று சொல்லி இத் திட்டததை ஏற்க மறுப்பதாகவும், ஆனால் ரமணரின் தம்பி நிரஞ்சனானந்தன் என்பவர் ஓமந்தூராரைப் பார்த்து " உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ " என்று சொல்லிவிட்டாரென்றும் நம் பத்தக்க வட்டாரத்திலிருந்து செய்தி கிடைத்திருக்கிறது.

## அனைத்திந்திய காங்கிரஸ் தலைவர் தேர்தல்

### ஜூன் இறுதியில் நடைபெறும்

### ஆச்சாரியார் பெயரும் அடிபடுகிறது

புதுடில்லி, ஏப். 14—

அனைத்திந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் தேர்தல் ஜூன் மாதம் கடைசி வாரத்தில் நடைபெறும் என்று தெரிகிறது.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி போட்டுள்ள திட்டப்படி பிரைமரி பஞ்சாயத்துகளின் தேர்தல் அடுத்தமாத முடிவிற்குள் முடிந்துவிடும். இப்பஞ்சாயத்துகள் ஜூன் மாத நடுவிற்குள் முடிந்து 'தேர்தல்' காலேஜ் ஏற்படுத்தப்பட்டுவிடும்.

தலைவர் தேர்தலுக்கு இன்னும் இரண்டு மாதம் இருக்கும் இச்சமயத்திலேயே யார் இப்பதவிக்கு நிற்கக்கூடும் என்ற உத்தேசங்கள் கிளம்பியிருக்கின்றன. இது சம்பந்தமாக சங்கரராவ்தேவ் டாக்டர் பிரபுல்ல சந்திர கோஷ், ஆச்சார்ய கிருபளானி புருஷோத்தமதாஸ் தாஸ் தாண்டன், சி. ராஜகோபாலாச்சாரியார் இவர்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

## காஷ்மீர் தகராறு பற்றி லண்டன் நம்பிக்கை

லண்டன், ஏப். 14—

காஷ்மீர் மத்தியஸ்தர் நியமன விஷயமாக இந்தியாவும்-பாகிஸ்தானும் தன் அங்கீகாரத்தை தெரிவித்திருப்பது இத் தகராறு சுமுகமாகவே நடக்க சாத்தியமாகும் என்பதற்காக அறிகுறியாகுமென்று லண்டன் அதிகார வட்டாரங்களில் கூறப்படுகிறது.

மத்தியஸ்தராக நியமனம் பெற்றுள்ள ஸார் ஓவன்டிக்ஸன், ராணுவ விஷயம் அதிகம் தெரியாதவரானதால், அவருக்கு உதவிசெய்ய இதர நாடுகளிலிருந்து ராணுவ நிபுணர்களைப்பாகிஸ்தான்-காஷ்மீர் அனுப்பும் சாதனைவிவில் ஏற்படுத்தும் என்றும் கூறப்படுகிறது.

பாகிஸ்தான் இந்தியா உடன்படிக்கை விஷயமாக பண்டித நேருவுக்கும் சர்தார்படேலுக்குமிடையே ஒற்றுமை மனப்பான்மை காணப்பட்டது. இது பரமதிருப்தியை அளித்திருக்கிறது.

இந்தியா—பாகிஸ்தான் ஒப்பந்தத்தை அமுல் நடத்தும்போதும், உள்நாட்டு மந்திரியான சர்தார் படேல் வசமேதான் இருக்கிறது என்றும் இந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

## லியோபால் வான்ஜிலந்து பேட்டி

ஜினிவா, ஏப். 14—

பெல்ஜியத்தில் பிரதமராக வரவிருக்கும் வான் ஜிலந்து இரண்டாம் தடவையாக மன்னர் லியோபால்டைச் சந்தித்துப் பேசினார்.

வான்ஜிலந்தை நிருபர்கள் சந்தித்தபோது, தான் ஜினிவாவிலேயே இரவு தங்க உத்தேசித்திருப்பதாகவும், அதற்குமேல் எதுவும் சொல்வதற்கில்லை என்றும் கூறிவிட்டார்.

# மாலை மணி

சென்னை 15—4—50 சனிக்கிழமை


# இரு நாடுகள்

நான்கு ஆண்டுகளில் 470 தடவை கூடிற்று பாதுகாப்புக் கௌன்சில்! உலகப் பாதுகாப்புக்காக, உலக மக்கள் ஒருவரோடொருவர் போரிட்டுக்கொள்ளாமல் சமாதானத்துடன் வாழ அமைக்கப்பட்டது பாதுகாப்பு கௌன்சில்—உலக மன்றத்தின் ஒரு முக்கிய உறுப்பு.

பாதுகாப்புக் கௌன்சில் உண்மையில் பாதுகாப்பைத் தேடித்தந்ததா? அதன் தலைவர் கூறுகிறார் இல்லவேஇல்லை யென்று!

"உலக மன்றம் முக்கிமாகப் பாதுகாப்புக்கௌன்சில் ஏன் தோற்றுவிக்கப்பட்டதோ அதைச் செய்யவில்லை; அதன் காரணமாக இன்று ஆபத்து அதிகரித்துள்ளது" என்று அவர் கூறுகிறார்.

470 முறை கூடினர் நான்காண்டுகளில். சமாதானம் வளரவேண்டும், வளர ஆக்க வேலைகள் செய்யவேண்டும் என்று அவர்கள் பேசவில்லை. அவர்கள் பேசியது இன்றோ நாளையே போர்மூளப்போகிறதென்று உலக மக்கள் திணறும் நிலைஉண்டாக்கியுள்ளது.

"ரஷியாவின் ஆக்ரமிப்பிலிருந்து சுதந்திரமாக வாழ விரும்பும் ஜனநாயக நாடுகளைக் காப்பாற்ற அணுகுண்டுமட்டும் போதாது—ஹைட்ரஜன் குண்டும் வேண்டும்; ஆகையால் ஏமாந்திருக்க மாட்டோம்; அமைதியைக் காக்க ஆயுதம் தேவையென்று அமெரிக்கா ஓயாமல் கூறுகிறது.

"பொதுவுடமை ஒரு பச்சிளங் குழந்தை. அதை நசித்துவிட முதலாளித்துவ அமெரிக்கா முயன்று கொண்டிருக்கிறது. அந்நாடு படைபலத்தைப் பெருக்கிக் கொண்டிருக்க நாங்கள் மட்டும் எப்படிச் சும்மா இருக்க முடியும்? என்று சோவியத் ரஷியா கூறுகிறது.

இவ்விரண்டு நாடுகளும் பாதுகாப்புக் கௌன்சில் கூடிய 470 கூட்டங்களிலும் பேசி விட்டன. சமாதானம் தேவையென்று. நான் சமாதானத்தை வளர்க்கத்தான் முயல்கிறேன்; அவன்தான் கெட்டப்பயல்" என்று இரண்டும் ஓயாமல் கூறுகின்றன!

பாதுகாப்புக் கௌன்சில் என்று ஒன்றில்லாமல் இருந்தால் உலக நாடுகளின் பிரதிநிதிகள் அங்கு வந்து கூடாமல் இருந்தால் உண்மையில் போர்மூளப் போகிறதென்றபின், ஒரு போர் முடிந்து, அதனுடைய சாயல்மாறுத முன்பே மீண்டும் ஏற்பட்டே இருக்காது. இரண்டு வல்லரசுகள்—ஒன்று முதலாளித்துவ அடிப்படையில் அமைந்தது, மற்றொன்று பொதுவுடமை அடிப்படையில் ஆக்கப்பட்டது. ஒன்றையொன்று அழிக்கத் தயாராகக் காத்துநிற்கின்றன. இவைகளுக்குப் பக்கமேளம் வாசிக்கும் நிலைதான் மற்ற நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளன. இன்றைய நிலையில் ஆரிய இனம்தான் உலகை ஆளவேண்டுமென்று கூறிய இட்லரின் தலைநகராக இருந்த பெர்லின் நகரிலா, இந்தோசீனுவிலா அல்லது பார்மோசா தீவுக்கருகிலா யுத்தம் மூளப் போகிறதென்றுதான் மக்கள் முடிவு செய்யவில்லையே தவிர எதிரிகள் ரஷியாவும் அமெரிக்காவுமாகத்தான் இருக்குமென் பதில் அரசியல் ஞானம் சிறிது பெற்றவர்களுள்கூடச் சந்தேகிக்கமாட்டார்கள்

பாதுகாப்புக் கௌன்சில் ஒழுங்காகத் தன் வேலையைச் செய்யமுடியவில்லையென்று கூறுகிறார், "தன் தலைவராக இருந்து பணியாற்றிய எகிப்தியத் தோழர் முகம்மது பாஜிபே அதுமட்டுமல்ல. பாதுகாப்புக் கௌன்சில் ஆரம்பிக்கையில் இருந்ததைவிட அமைதி ஆட்டம் கொடுத்துள்ளது; சமாதானம் சரிந்து கொண்டிருக்கிறது

ஏழை-பணக்காரன் என்ற நிலை, கருப்பன், வெள்ளையன் என்னும் பேதம், மதத்தின் பேரால் சச்சரவுகள் இருக்கும் வரையில் உலகில் அமைதி நிலவ முடியாதென்பதே நம்முடைய துணிபான முடிவு. பொதுவுடமைக் கொள்கையில் பற்றுகொண்டிருந்தார்கள் என்ற காரணத்துக்காக 11 அமெரிக்கர்கள் கொடிய கடுங்காவலுக்கு ஆளாக்கப்பட்ட அநீதியான நிலை ஐரோப்பாவிலிருந்துவந்து ஆப்ரிக்காவில் குடியேறி அங்கு வாழும் மக்கள் அடிமைகளாகவே வாழவேண்டுமென்று கூறும் மந்தபுத்தி படைத்த மலானின் வெள்ளையர் உயர்ந்தோர் என்ற நிலை உள்ளவரை, உலக அமைதி உண்மையில் இருக்குமா, இருக்கமுடியுமா?

## பத்திரிகைக்கு செய்திவேண்டுமா?

லண்டன், ஏப். 14—

'அமெரிக்கன்' என்ற நியூயார்க் பத்திரிகையின் நிருபர் எடிட்டருக்கு பட்னெஸ்ட் என்பவர் டெலிபோன் செய்தாராம். நடுநிசியில் அவர் டெலிபோனில் பேசுகையில், தான் ரேடியோ டெலிவிஷன் உற்பத்தியாளர் என்றும், டெடிபர்னஸ் என்ற நடிகையைத்தான் மணந்திருப்பதாகவும், இறக்குமுன் குவென் பிக்கேர்ட் என்ற நடிகையை மணந்திருந்ததாகவும், பத்திரிகைக்கு நல்ல செய்தி வேண்டுமானால், தன் விலாசத்திற்கு 10-நிமிஷத்தில் ஒரு ரிப்போர்ட்டரை அனுப்பினால் கிடைக்கும் என்றும் அறிவித்தாராம்.

ரிப்போர்ட்டர் அங்கு போனபோது பட்னெஸ்ட் தற்கொலை செய்துகொண்டு மாண்டு கிடந்தான்.

## இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்பு

### தீர்மானம் நிறைவேற்றிய கழகங்கள்

(தொடர்ச்சி)

- கொழும்பு
- திண்டிவனம்
- மேலச்சண்முகபுரம்
- இராமநாதபுரம்
- தவுட்டுப்பாளையம்
- பன்னுங்கொம்பு
- சித்தளந்தூர்
- செவ்வாய்ப்பேட்டை—சேலம்
- சத்தியமங்கலம்
- ஆனைமலை
- மேட்டுப்பாளையம்—திருச்சி
- திருச்செங்கோடு (தி. மு. ம. க.)
- பெரியகுளம்
- மார்சக்பேட்டை—திருச்சி
- புதுப்பேட்டை சென்னை
- அருப்புக்கோட்டை
- க புதுப்பட்டி
- பெரியார் இராமசாமி நகரம்
- காமயகவுண்டன்பட்டி

### மற்றைய கழகங்கள்

- அருப்புக்கோட்டை (தியாகராய இளைஞர் கழகம்)
- இராமநாதபுரம் (தே. வா. வா. ச)
- வண்ணையம்பதி (தி. கு. வாசகசாலை)
- தூத்துக்குடி (சி. என். ஏ. கழகம்)

## பாராளு மன்றத்தில் மாகாணங்கள் பெறும் பங்கு

புதுடில்லி, ஏப். 13

இன்று இந்திய பாராளுமன்றத்தில் டாக்டர் அம்பேத்கார் ஒரு மசோதா மூலம் மத்திய ஆட்சியில் மாகாணங்களின் பங்கு எவ்வளவு என்பதை விளக்கினார். அது பின்வருமாறு:—

பொதுமக்கள் சபையில் மொத்தம் 488 உறுப்பினர் இருப்பர். 7·2 லட்சம் மக்கள் தொகை கொண்ட பகுதி ஒன்றுக்கு ஒரு ஸ்தாபனம் வீதம் இந்த ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவ்வகையில் உத்தர பிரதேசம் அதிகமான ஸ்தானங்களைப் பெறுகிறது. அதாவது 86 ஸ்தானங்கள்; அடுத்தபடியாக சென்னை 75 ஸ்தானங்களைப் பெறுகிறது. மற்றவை:

அசாம் 12, பீஹார் 55 பம்பாய் 45, மத்திய பிரதேசம் 29, சென்னை 75, ஒரிசா 20, பஞ்சாப் 18 மேற்கு வங்காளம் 34, ஐதராபாத் 25, ஜம்முவும் காஷ்மீரும் 6, மத்திய பாரத் 11, மைசூர் 11, பாட்டியாலா, கிழக்கு பஞ்சாப் சமஸ்தானங்கள் 20 சௌராஷ்டிரம் 6, திருவாங்கூர், கொச்சி 12

## தென்னாப்பிரிக்கக் குடியரசு பற்றி மலான்

கேப்டவுன், ஏப். 14—

தென்னாப்பிரிக்க பார்லிமெண்டில் ஸ்மட்ஸ் கேள்விக்கு பிரதமர் மலான் பதிலளிக்கையில் காமன்வெல்த்திற்குள் தென்னாப்பிரிக்கா குடியரசாக இருப்பது சாத்தியமென்றும், ஆனால் மக்களைக் கேட்காமல் இவ்விஷயமாக எதுவும் செய்யப்படமாட்டாது என்றும் கூறினார்.

பாண்டுக்களையும் இதர சுதேசிகளையும் பிரித்து அவர்களுக்கு தனி 'ஸ்தான்' அமைப்பது பற்றி ஸ்மட்ஸ் கேட்டதற்கு சுதேசிகளை சொந்தமாக ஒதுக்கிவைப்பது நல்லது தான் என்றாலும் அனுபவ சாத்யமான யோசனையல்லவென்றும் பொருளாதார சுபிட்சத்திற்கு அவர்கள் உதவி வேண்டியிருக்கிறது என்றும் கூறினார்.

# இந்து சட்ட திருத்த மசோதாவுக்கு ஆதரவு

——(0)——

## சென்னை தேனும்பேட்டையில் தலைவர்கள் சொற்பொழிவு

சென்னை, ஏப். 14—

சென்னை தேனும்பேட்டை இளைஞர் கழகத்தின் மூன்றாவது ஆண்டு விழாக் கூட்டம் வேளாளர் தேனும்பேட்டையில் சிறப்பாக நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்தார்கள்.

தோழர் ஆதிகேசவலு முன்மொழியவும், தோழர் வெங்கடேசன் வழிமொழியவும் முன்னாள் அமைச்சர் முத்தையா கூட்டத்திற்குத் தலைமை ஏற்றார்.

தலைவர் பேசும்போது இந்துமத சீர்திருத்தத்திற்காகப் 15 ஆண்டுகளாக முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டதென்றும், இன்றுதான் முயற்சி கைகூடும் நிலையிலிருக்கிறதென்றும் கூறினார். ஜாதிவித்யாசமில்லாமல் மணம் முடித்துக் கொள்ளலாம்; ஒன்றாக வாழ்க்கை நடத்த விரும்பாத தம்பதிகள் விவாகரத்து செய்துகொள்ளலாம்; கணவன் கூறிவிட்டுச் செல்லாவிட்டாலும் பெண் சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம், வாழ்க்கை ஒப்பந்தத்தில் எச்சட்டக்காவது சேர்த்துக் கொள்ளப்படலாம், என்பதுதான் இம்மசோதாவின் முக்கிய அம்சங்கள். சிலபேருக்குப் பிடிக்கவில்லை என்ற காரணத்தால் தள்ளிவிடக்கூடாது' என்று தோழர் முத்தையா கூறினார்.

தோழர் சச்சிதானந்தம் பேசுகையில் சமுதாய அமைப்பே சிலருக்கு நன்மை தரக்கூடியதாக இருக்கிறதென்றும், கன்னடைப்பு போன்ற சாதாரண உரிமைகள் அளிக்கக் கூடியதாக இந்த சட்டத் திருத்த மசோதாவிலும் அதையும் சிலர் எதிர்க்கிறார்களே என்ற காரணத்தால்தான் தன்னைப் போன்ற தொண்டர்கள் ஆதரிக்கிறார்கள் என்று கூறினார்.

தோழர் ராகவலுதான் பேசுகையில் தோழர் அம்பேத்கார் 18 மாதங்களாக 3-மணி நேரம்தான் தூங்குவதாகவும், அவ்வளவு சிரமப்பட்டு இந்த சட்டத் திருத்த மசோதாவைத் தயார் செய்ததாக டாக்டர் அம்பேத்கார் தன்னிடம் கூறினாரென்றும் கூறினார்.

தோழர் என். வி. நடராசன் பேசுகையில் முற்போக்குக்கான சட்டங்களைக் கொண்டுவந்த போதெல்லாம் சனாதனம் பலத்த எதிர்ப்பிட்டுள்ளதென்று கூறினார். இந்த சட்டத்திருத்த மசோதா கூட்டம் காங்கிரஸ் மைதானத்தில் நடத்திருக்கவேண்டுமென்றும், ஆனால் அந்த நடனம் நடந்துகொண்டிருக்கத் தோழர் காமராஜ் இருந்த இடமே தெரியாமல் இருக்கிறதென்று கூறினார்.

"காங்கிரஸ் தலைவர் எதிர்க்கிறார், குடியரசுத் தலைவர் எதிர்க்கிறார்! நமக்கேன் இந்தத்தொல்லையென்று தாய்மார்கள் மைலாப்பூர் கோகலே மண்டபத்தில் நடந்த பெண்கள் மகாநாட்டுக்குக்கூட வர மறுத்து விட்டார்கள். கும்பமேளாவுக்குச் சென்றிருக்கிறோம் ஒத்திவையும் என்று கேட்டுக்கொண்டதால் அபிப்பிராயம் அறிவிக்குந்தேதி கூட ஏப்ரல் 14ந் தேதியிலிருந்து 20ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆதரிப்புக் கூட்டங்களைப் பத்திரிகைகள் இருட்டடிப்பு செய்கின்றன. ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி கூடாது. 'மாதா மாதா' என்ற முறையில் வந்த தாய்மார்களைக்கேவலப் படுத்துவதா? கட்சி வேறுபாட்டை மறந்து வாலிபர்கள் திரண்டெழ வேண்டும்; சந்துக்கொரு கூட்டம் போட்டு தந்தி மூலம் டாக்டர் அம்பேத்காருக்கு ஆதரவளிக்கிறோம்" என்று அறிவிக்க வேண்டும் என்று கூறினார்.

[டாக்டர் முத்துலட்சுமிரெட்டி, தோழர் சி. என். அண்ணாத்துரை சொற்பொழிவு நாளை வரும்.]

## அநீதியை அகற்ற . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம் கூறுகிறது. எங்கு பார்த்தாலும் கிராப்புத் தலைபாகிவிட்டதே!

எனக்கு மட்டும் 3½ நாழிக்கு ஆட்சி தரப்படுமானால், சாஸ்திரத்தின்படி நடந்தால் தான் பிராமணன்; இல்லாவிட்டால் ஜாதியை விடு என்று சட்டம் போடுவேன். சாஸ்திரப்படி இருந்தால் உன்னை குருவாகப் பாவிக்கிறேன், இல்லையேல் மனிதனாகவா என்று கூறுவேன்.

இந்த வந்திருக்கும் தாய்மார்களெல்லாம் பிராமண சகோதரிகளுக்கு எடுத்துக்கூற வேண்டும் பெண்ணுரிமை கோரி அவர்கள் கிளர்ச்சி செய்ய வேண்டும்.

காமராஜர் இந்து சட்டத் திருத்த மசோதாவைப்பற்றி எனக்குக்கவலை இல்லையென்று சொன்னாராம். ஆம் அவர் ஏன கவலைப்படவேண்டும்? இந்திரனுக்கு உதவச் சென்ற தமிழ் மன்னனைப் பெற்றெடுத்த தாய் வம்சத்தில் தோன்றியவர்கள் நீங்கள். மனதுசோர்வடையாமல் போராடுங்கள். மந்திரிகளைக் கேட்கிறேன் நீங்கள் தமிழ்த்தாய் வயிற்றில் பிறக்கவில்லையாவென்று? நாங்கள்பெற்றப்பிள்ளைகளாக இருந்தும் கொடுமைகளைப் போக்கமுன்வாவில்லையே. இவ்வாறு செய்வீர்கள் என்று தெரிந்தால், அன்றே கழுத்தைத் திருகிக் கொன்றிருப்போம். கேவலம் பதவிமோகத்தால் மதியிழந்துகிடக்கிறீர்களே:—

ஒன்றே குலமும், ஒருவனே தேவனும், என்று வாழ்ந்தவர்கள தமிழர். கெடுத்துவிட்டார்கள் வயிற்றுப்பிழைப்புக்காக அண்டவந்தவர்கள். சமுதாயம் சீரழியும்படி செய்துவிட்டார்கள். எல்லோரும் ஒன்றென்னும் நிலை ஏற்படவேண்டும். அகற்றத் தாய்மார்கள்தான் கிளர்ச்சி துவக்க வேண்டும். இவ்வாறு செய்தால்தான் சமைப்பேன்என்று அறப்போர் துவக்குங்கள். நமயற்சி கைகூடும் நாள் வெகு தொலைவில் இல்லை.

ஆபாசச் சடங்குகளுடன் நம் பெண்களுக்குத் திருமணம் முடிக்கப்படுகிறது ஒரு பெண் கணவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக்கப்படுவதற்கு முன், பலபேருக்கு மனைவியாகிருள் மந்திரத்தின்படி. முதலில் இந்திரனுக்கு இரண்டாவது கந்தர்வனுக்கு, மூன்றாவது மந்திரமோதும் ஐயருக்கு, நான்காவதுதான் கணவனுக்கு மனைவியாகிருள். இது ஒரு மந்திரமா? நமக்கு இது தேவைதானு?

ரஷியாவில் ஒரு லட்சம் பெண்கள், இன் ஜினியர்களாக உள்ளனர் 3லட்சம் இயந்திரம் இயக்குவோராக உள்ளனர். அவர்களைப்போல் நாங்கள் இருக்கக் கூடாதா? வைதிகக் குடுக்கைகளே நீங்கள் எதிர்க்கலாமா?" என்று பேசி முடித்தார்.

# அன்னைமாரை அடிமைப்படுத்த தோன்றியதே ஆரியதர்மம்

## இந்துமதப் பித்தலாட்டங்களுக்கு இனி இடங்கொடோம்

### வைதீகத்தின் வாலாட்டத்தை மட்டந்தட்டுவோம்

—(o)—

### பெண்கள் மாநாட்டில் தோழியர் வெற்றிச்செல்வி அன்பழகன் ஆற்றிய திறப்புரை

மாநாட்டுப் பிரதிநிதிகளே!
தோழியர்களே !!
பெரியோர்களே !!!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவில் கூட்டப்பட்டுள்ள, இந்த திராவிடப்பெண்கள் மாநாட்டைத் திறந்து வைக்கும் பெரும் பணியை எனக்களித்தமைக்காக எனது நன்றியையும், வணக்கத்தையும் மாநாட்டு வரவேற்பு குழுவினருக்கும், பிரதிநிதிகளுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மாநாட்டினைத் திறந்து வைக்க இசைந்த அம்மையார் வர இயலாமையினாலேயே இப்பணி, அறிவு ஆற்றல்களிலே குறைந்த எனக்கு அளிக்கப்பட்டுள்ளது. பெரியவர்கள் கைவிட்டுவிட நேரும் பணியைத்தொடர்ந்து நடத்தி, வெற்றி காணவேண்டியது இளைஞர் கடமை என்பதையே இதுவும் காட்டுகின்றதென்று நினைக்கிறேன்.

இம்மாநாடு, திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நடைபெறும் முதல் பெண்கள் மாநாடு என்பதோடு, ஒரு முக்கியமான வேளையில் கூடியுள்ளதாலும் முக்கியத்துவமுடையதாகும். இன்று நாம் நிறைவேற்ற இருக்கும் தீர்மானங்களும் மிகவும் பயனளிக்கக் கூடியனவாகும்.

இன்று ஆட்சி நடத்தும் கட்சியாரால் பாராளுமன்றத்தில் சில மாதங்களுக்கு முன்பே கொண்டுவரப்பட்ட இந்து சட்டத்திருத்தத்தொகுப்பு மசோதாவுக்குக் கிளப்பி விடப்பட்டுள்ள சுயநலமிகளின் அர்த்தமற்ற எதிர்ப்புக் கூச்சல் கண்டு, அம்மசோதாவிற்கு உள்ள பொதுமக்களின் ஆதரவைக் கண்டறிய, மசோதாவைக் கொண்டு வந்த அமைச்சர் டாக்டர் அம்பேத்கார், ஏப்ரல் 14-தேதியன்று டில்லியில் ஒருமாநாடு கூட்டியுள்ளார். அம்மாநாட்டிற்கு நாம் நிறைவேற்றும் தீர்மானமும் கிடைக்கும்படி செய்யவே—நமது மாநாடு இன்று நடைபெறுகிறது.

இந்து சட்டத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டு, பாராளுமன்றத்தில் முதல் தடவை படிக்கப்பட்டு நான்கு மாதங்கட்கு மேல் ஆகின்றன. கொண்டுவந்தவரோ பேரறிஞர், இந்திய அரசியல் திட்டத்தையே வகுத்த நிபுணர் எனப் புகழ்ப்படும் அம்பேத்கார் ஆவார். ஆனால், அவரது அரசியல் திட்டத்தையே கூட புகழ் மாலை சூட்டி ஏற்றுக் கொண்டவர்கள் இதற்கு மட்டும் வெறுப்பு பேசுகின்றனர். வைதீகர்கள் வரிந்து கட்டுகின்றனர், சனாதனம் சட்டம் கலங்கின்றது. வருணாச்ரமம், பழமைப் பித்தம், மூடநம்பிக்கை ஆகியவைகள் அணிவகுக்கின்றன; இந்து மதத்திற்கு, சனாதன தர்மத்திற்கு அபத்து என்று உரத்தக் குரலில் ஊளையிடுகின்றனர். இந்து மதம், சாதிக்கொரு கட்டு அமைத்துபிரிக்கப்பட்டு கலகலத்துப்போன பழைய வீடு. சாத்திரங்கள் என்ற உத்திரங்களும், ஆகமங்கள் என்ற தூண்களும், வேதங்கள் என்ற வாயிற்கதவுகளும், புராணங்கள் என்ற காற்றுசன்னல்களும், இதிகாசங்கள் என்ற கூரையும் கொண்டு அமைந்த அவ்வீடு, உத்தரங்கள் உளுத்து, தூண்கள் மடித்து, கதவுகள் கரையான் பிடித்து, சன்னல்கள் சரிந்து, கூரைகள் பிய்த்து, பார்ப்பதற்கே பயங்கரமாய், குட்டிச் சுவராய் நிற்கிறது அதன் சமூகச் சட்டமாகிய சுவர்கள் காலவேகமென்னும் காற்றுமழையால் கரைந்து இடிந்துபோய் விட்டன. மிச்சமுள்ள சுவற்றிலும் வெடிப்புக்களும், சந்துகளும் ஏராளம். குடியிருக்கு தகுதி இழந்த இவ்வீட்டைப் பார்வையிட நுழைந்தால்கூட பழமைப் பாம்பு தீண்டுமோ, வைதீகத் தேள் கொட்டுமோ என்று அஞ்ச வேண்டியிருக்கின்றது. இத்தகைய பாழடைந்த, பயனற்ற, கேடுசெய்யும் வீட்டை, (வீடு என்ற பெயரால் உள்ள குப்பைமேட்டை) அடியோடுஅகற்றி வேறு வீடு கட்டத்தான் விரும்புவர் பகுத்தறிவாளர் எவரும். நல்லதொரு நகரமன்றம், இப்படி ஒரு வீடு இருந்தால் அதை அனுமதித்துக் கொண்டிராது. ஆனால் ஆட்சியாளரோ அதனிடத்தில் கொண்டுள்ள காதலால், எப்படியேனும் காப்பாற்றவே கருதியுள்ளனர். உ[illegible]வுக்குச் சின்னமான பலபழம்பொருள்களைக் காப்பதுபோலவே, இழிவைத்தரும் இதனையும் காத்திடவே கருதுகின்றனர்.

ஆதலால்தான், பகுத்தறிவுப் பகலவனின்கதிரொளியாலும், காலச் சுழற்சியின் வேகத்தாலும், மடித்து கலகலத்துப் போய் அடிப்படை அழிந்துள்ள இந்த சமூகத்தைக் காக்க, அதன் அமைப்பைப் பாதுகாக்கும் இந்துச் சட்டத்தைப் புதுப்பிக்க இந்துச் சட்டத் திருத்த மசோதாவைக் கொண்டுவந்துள்ளனர் பழைய—பாழான குட்டிச் சுவற்றிற்குச் சுண்ணாம்பு பூச முன் வந்துள்ளனர். வெள்ளையடித்தால், அதன் கீறல்களும் வெடிப்புகளும் சிறிது மறையுமல்லவா? தம் காலம் கடந்தால் பின்னர் எப்படியோ போகட்டும் என்பதே அவர்கள் எண்ணம்.

பழைய சுவற்றுக்கு வெள்ளையடிப்பதா? வெள்ளையடித்தால் புதியதாகத் தோன்றுமா? அதன் பழமையைக் குலைப்பதா? இந்தக்காலத்தில் பிறந்தவர்களுக்கு அந்தக் காலத்து வீட்டைப் புதுப்பிக்க அதிகாரமேது? அதன் கவர்ச்சிமிக்க பழைய தோற்றம், இருள் கப்பிய உட்புறம் இவை கெட நாங்கள் விட்டுக் கொடுப்பதா? முடியவே முடியாது எனத் தலைத் தலைகீழாகத்தொங்கி ஊஞ்சலாடிய படிமற்ற மக்களெல்லாம் தலைகீழாக நடக்கிறார்கள் என்று சேவி பேசிடும் வௌவால்களும், ஊரார் சொத்தை உண்டு கொழுத்து, வளை தோண்டி வாழ்ந்து, ஒளியைக்கண்டால் வெறுக்கும் பழமைப் பெருச்சாளிகளும் உரத்தக் குரலில் உறுமுகின்றன. அங்குவாழும் பூச்சிப் பொட்டுகளும் பேசுகின்றன. அந்தச் சத்தங்களும் நமதுநாட்டு தினசரிகளில் பத்திபத்தியாக இடம்பெற்று, மனிதர் பேச்சென நினைக்கும்படி செய்துவிட்டன. அதன் விளைவாகவே இம்மசோதா—நிறைவேற்றப்படுவதற்குப் பதில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்துமதம்— மதம் என்று சொல்லும் தகுதியுடையது கூட அல்ல. இந்துமதம் ஒரு மதம் அல்ல என்பதற்கு ஆதாரங்கள் பல. 'இந்து' ஒரு கூட்டம். இனம் ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்—ஆரியர் சிந்து நதிக் கரையில் வாழ்ந்தபோது அவர்களுக்கு ஏற்பட்ட 'சிந்துக்கள்' என்ற பெயரே—பிற்காலத்தில் 'இந்துக்கள்' என்று வழங்கப்பட்டது. ஆரிய இனத்தாரே—இந்துக்களாவர். இக்கூட்டத்தார் தங்களுக்கென ஏற்படுத்திக் கொண்ட சில முறைகளே 'இந்து தர்மம்' எனப் பெயர் பெற்றது. மனுவும், மாந்தாதாவும், யாகஞவல்கியரும் வகுத்ததாகக் கூறப்பட்டதும் இந்தச் சட்டதிட்டந்தான். நாமோ—அந்தக் கூட்டத்தாரல்ல அந்த தர்மத்திற்கு இயைபினாலே கட்டுப்பட்டவர்களுமல்ல எனினும், ஆரியர்களின் வல்லடி வழக்குகளாலும், ஆங்கிலேயரின் ஆதிக்க நோக்கத்தாலும், அத்தர்மத்தை செயற்கையால் ஒப்புக்கொண்டவர்களாக இருக்கிறோம். ஆனால், இன்றளவும் நம் வாழ்வு இயல்பினாலே இந்த தர்மத்திற்கு ஒத்துவரவில்லை என்பதை மறந்துவிடக் கூடாது.

தமிழ்ப்பெருநாட்டின் தனிப்பெரும் புலவர் திருவள்ளுவர் தந்த உயர்நெறியை, வாழ்க்கை நெறியாகக் கொண்ட நம் தமிழர் எந்நாளும், மனு, மாந்தாதா வகுத்த சூதுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கவில்லை. 'ஜாதி' என்ற சொல்லையே அறியாதநாளில், வேறுபாட்டினைச் சட்டமாக்கிக் கொள்ளாத நாள், ஒரு குலத்துக்கொரு நீதியை ஒப்புக்கொள்ளாத நாம் இந்து தர்மத்தை மனமார ஒப்புக் கொண்டதில்லை. ஜாதிக்கொரு நீதி வழங்கி, நான்காம் சாதியை நடுத்தெருவில் நிறுத்திய அவர்கள் எங்கே?—சமதர்மத்தை நோக்காகக் கொண்டு, சமத்துவமுள்ள சமூக வாழ்வைக் கொண்டிருந்த நாம் எங்கே? உண்மையில் நாம் இந்துக்களல்ல—இந்துக்களாகப்—பிறரால் அழைக்கப் பட்டதன்றி — இந்துக்களாக இப்பொழுதில்லை நாம் திராவிடர், தமிழர், குறள் நெறியினர். என்றாலும், நம்மை ஆளும் சமூகச் சட்டம், இந்து சட்டமாக இருக்கிறது என்றாலும், அதைச் சிறிதேனும் திருத்த ஆட்சியாளர் முன்வரும்போது, நமது துயரம், அந்த அளவுக்காவது குறையுமே என்ற எண்ணத்தாலேயே திராவிடர்களாகிய நாம் அதை ஆதரிக்க முன்வருகிறோம்.

அதற்கு மாறாக, இத்திருத்தத்தைத்தான், வைதீகர்களின் கூச்சல் மட்டுமன்றிக் காங்கிரஸ் கண்ணியர்களின் வாயசைப்பும் எதிர்க்கின்றன. இந்த பாரதத்தின் பிரசிடெண்டாக வீற்றிருக்கும் 'சாந்த சொரூபி' பிரசாத்தும், அகில இந்திய காங்கிரஸ்கட்சியின் தலைவர் பட்டாபி சீதாராமய்யாவும்கூட, "இன்று என்ன அவசியம்? பின்னர் பார்த்துக்கொள்ளலாம். மக்கள் கருத்தை அறியாத செயல்" என்றெல்லாம் கூறி, முட்டுக்கட்டைகள் போட்டுள்ளனர்.

உண்மையில் இம்மசோதாவைக் கொண்டு வந்துள்ள டாக்டரும், ஆதரித்து நிற்கும் பண்டித நேருவும் இன்றைய இந்து சமூகத்துக்கு ஏற்பட இருக்கும் அழிவைத் தடுக்கவே, இம்மசோதாவை நிறைவேற்றுவதில் உறுதிகொண்டுள்ளனர் என்பதையும் அவர்கள் அறிய மாட்டார்கள் போலும்.

மாறாக, வைதீகர்களின் எதிர்ப்பு இதற்கு மட்டுமல்ல, இன்று மட்டுமல்ல. புதுமை மணம் வீசும் எதற்கும், என்றும் இருந்தே வந்திருக்கிறது. ஆண்களுக்குப் பெண்கள்—ஆசை காட்டுவதற்குரிய விலங்குகள், போகப் பொறிகள், பிள்ளை பெறும் இயந்திரங்கள், காமக்கூடுகள், பணிவிடை செய்து பர்த்தாவைக் காக்க வேண்டிய கூலிகள், பிராமணர்களுக்குச் சூத்திரரைப் போல, எஜமானர்களுக்கு அடிமைகளைப் போல, அன்பு கெடாது தொழுதிருக்க வேண்டியவர்கள்— என்ற கருத்துக்களில் ஏதேனும் சிறு மாற்றமேற்படும் என்று சந்தேகமேற்பட்டால் கூடப் பழமை விரும்பிகள் அதை எதிர்க்கத் தவறியதே இல்லை. கல்லானாலும், கணவன், புல்லானாலும் புருடன், கபோதியானாலும் கண் கண்ட தெய்வம், அடித்துதைத்துக் கொடுமைப்படுத்தினாலும் அவனேதான் எல்லாம் என்று கருதிப் பெண்கள் நடக்க வேண்டும் என்பதிலே, சனாதனத்துக்கு எப்பொழுதுமே கண். பெண்-மகளாக உள்ளவரையில் தந்தைக்கு, மனைவியானால் கணவனுக்குத் தாயானால் மகனுக்கு அடிமையாக இருக்கும் முறையிலே அணுவளவும் மாற்றமேற்படுவதை ஒப்பமாட்டார்கள், அம்மாமண்டையினர். எந்தச் சீர்திருத்தத்தையும் எதிர்க்காமல் இருந்ததில்லை. அந்த வேதவாதிகள்.

கணவன் இறந்துவிட நேர்ந்தால், அவனைக் காதலனாகக் கொண்ட கன்னியும், அவனோடு சேர்த்தே தீயினில் இறங்கி எரிந்து உயிர்விட வேண்டும், மறுத்தால் எரிக்கப்படவேண்டும் என்ற ஒரு கொடிய வழக்கு, முன்னாளில் தலைவிரித்தாடிற்று. வடநாட்டில் பரவி இருந்ததைப்போல் தமிழ்நாட்டில் இடம் பெற்றதில்லை—இங்கிருந்த, நாகரிகம், பெருமையால். இந்தச் சகமனம், உடன்கட்டை ஏறும் கொடுமை, கூடாதென்று தடுக்க முன்வந்த சீர்திருத்தச் செம்மல்— இராஜா ராம்மோகன் ராய்க்கு, வைதீகப் பிண்டங்கள் காட்டிய எதிர்ப்பு ஏராளம். ஆனால் அந்த எதிர்ப்பு முறியடிக்கப்பட்டது இறுதியில். அவர்களோடு பெண்களும் சரிநிகராக வாழ இடமில்லையென்றாலும், சாக இடந்தேடிய கொடுமை—சகமனத் தடைச் சட்டத்திலேயே நீக்கப்பட்டது.

கணவனை இழந்தகன்னியர், கன்னி கழியா நிலையினராயினும், காதல் உணர்வினராயினும், மறுபடியும் இன்பத்தை எண்ணியும் பாராமல், தன் பத்திலேயே உழலவேண்டும் என்று நெருப்பிலை நிறுத்தி வைக்கும் கொடுமையை அகற்ற, முதன் முதல் விதவா விவாகம் செய்துகாட்ட முன்வந்த வீரர், ஈஸ்வர சந்திர வித்யாசாகரருக்கு, வைதீகம் இழைத்த இன்னல்கள் பலப்பல.

குழந்தைகட்கு மணம் செய்து, விதவையான பின், வேதனையிலேயே விட்டு வைக்கும், கொடுமையைக் களைய உதவிய விதவா விவாகச் சட்டமும் எதிர்ப்புகளுக்கிடையிலேதான் நிறைவேற்றப்பட்டது.

குழந்தை மணத்தடைச்சட்டம், சாரதா சட்டம் வந்தபோதும், இந்தப்பித்தலாட்டக்கூட்டம் வாலாட்டாமலிருந்ததில்லை. வாலை ஒட்ட நறுக்க அரசாங்கம் அஞ்சி கொண்டுள்ள காரணத்தாலேயே—அது திரும்பத் திரும்ப வாலாட்டியபடி உள்ளது. எனவேதான், இன்றும் இந்து சட்டத் திருத்த மசோதாவுக்கு எதிர்ப்புத் திருவிழா விசேஷ காணப்படும் பஸ்வாணம்போல் சத்தத்தோடு கிளம்பியுள்ளது. இறுதியில் கரியாகத்தான் செய்யும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அரிகம்மீது படாமல் இருக்க வேண்டும். உண்மையில் வைதீகர்கள் பிரசாரம் 'புரிவது போல் இம்மசோதாவால் ஏற்படக்கூடிய தீங்கு எதுவும் இல்லை. தாய் குலத்தை, ஆடவர்களையும் பெற்றெடுத்த அன்னைமாரை, அலட்சியப்படுத்தி, அடக்கி வைப்பதே இந்து தர்மம். ஆரிய முறை என்பதாலேயே, இதனை எதிர்க்கின்றார்கள். நமது தமிழ் ஏடுகளிலோ, கலைநாகரிகத்திலோ அக்கருத்துக்களுக்கு இடமில்லை. மாறாக, ஆண் பெண் சமத்துவத்திற்கும், காதல் கருத்தொருமித்து அளவு பட்ட இன்ப அன்பு வாழ்விற்குமே சிறப்பான இடமுள்ளது. எனவேதான், இம்மசோதாவுக்கு தென்னாட்டிலே பேராதரவு கிடைப்பது இயல்பாகிறது.

(தொடர்ச்சி நாளை வரும்)

## தி. மு. கழக தலைமைக்காரியாலயம்

கட்டட அமைப்புச் செலவுக்காக
தங்கள் அன்பளிப்பை
அனுப்பிவிட்டீர்களா?
இன்றே தருக!

பணம் அனுப்பவேண்டிய முகவரி:—

சி. என். அண்ணுத்துரை,
பொதுச் செயலாளர், தி. மு. க. தலைமை நிலையம்
2/45 முத்துமாரிச் செட்டித் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

## தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

| | ரு. அ. பை. |
|---|---|
| முன் வரவு | 479—0—0 |
| வி. பாலசுப்பிரமணியம், திருச்சி | 1—0—0 |
| தி. மு. க.-துறையூர் கிளை | 10—0—0 |
| ஜி. கிருஷ்ணராஜ், கல்கத்தா | 5—0—0 |
| ஜானகிராம், ,, | 2—0—0 |
| தி. மு. க.-திட்டக்குடி கிளை | 10—0—0 |
| கே. ஏ. தம்பித்துரை, அருப்புக்கோட்டை | 1—0—0 |
| ஆர். ஜகநாதன், சேலம் | 2—0—0 |
| சி. வே. சுப்பராயன், திருவத்திபுரம் | 3—0—0 |
| டி. வீம். ரங்கசாமி, ,, | 2—0—0 |
| வே. ராதாகிருஷ்ணன் ,, | 2—0—0 |
| சோலை, கந்தசாமி, ,, | 2—0—0 |
| ஓட்டல் அண்ணுமலை ,, | 2—0—0 |
| எம். என். வீராசாமி ,, | 2—0—0 |
| மா. நா. இராசமாணிக்கம் ,, | 2—0—0 |
| பி. டி. ஜனார்த்தனன் ,, | 1—0—0 |
| சி. பொன்னுசாமி ,, | 1—0—0 |
| மா. பூ கிருட்டிணன் ,, | 1—0—0 |
| வி. சி. அருணுசலம் ,, | 1—0—0 |
| சாமிநாதன ,, | 1—0—0 |
| போ. கா. இராமன் ,, | 1—0—0 |
| புரிசை சங்கரன் ,, | 1—0—0 |
| இ. நடேசன் ,, | 1—0—0 |
| எம். குமாரசாமி ,, | 1—0—0 |
| டாக்டர் சீனிவாசன் ,, | 1—0—0 |
| சி. ச. சண்முகம் ,, | 1—0—0 |
| கே. எம். நமசிவாயம் ,, | 1—0—0 |
| சி. கே. கணபதி ,, | 0—8—0 |
| கே. எஸ். சிம்மகுட்டி ,, | 0—8—0 |
| டி. கே. ஜெகன்னுதன் ,, | 0—8—0 |
| எஸ். இ. எம். சாமி ,, | 0—8—0 |
| ஜி. திருவேங்கடம் ,, | 0—8—0 |
| ப. கண்ணன் ,, | 0—8—0 |
| வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி ,, | 0—8—0 |
| சி. எஸ். வேல்குமார் ,, | 0—8—0 |
| மாலைமணி ராமசாமி ,, | 0—8—0 |
| புலவர் கோவிந்தன் ,, | 3—0—0 |
| | 544—8—0 |

நாடகம்

## "கத்திக் குத்து"

சென்னை, ஏ. 14—

வடசென்னை ஆதித்திராவிட மகா ஜன சங்க நிதிக்காக, சென்னை இளைஞர் இசைக் கழகத்தின் சார்பில், நேற்று மாலை வி. பி. ஹாலில் 'கத்திக் குத்து' என்னும் சமூக சீர்திருத்த நாடகம் நடைபெற்றது.

தோழர் சி. என். அண்ணுத்துரை அவர்கள் நாடகத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், சீர்திருத்த நாடகங்கள் நடைபெற வேண்டிய அவசியம் குறித்து வற்புறுத்தினர். நாடகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இறுதியில் கழகச் செயலாளர் அனைவருக்கும் நன்றிகூற இரவு பத்து மணிக்கு நாடகம் முடிவுற்றது.


(ந. வி.)

## ரேடியோ டெலகிராம் சிப்பந்திகள் ஸ்டிரைக்

கெய்ரோ, ஏ. 14—

எகிப்திலுள்ள மார்க்கோனி ரேடியோ டெலகிராம் கம்பெனியிலுள்ள சிப்பந்திகள் தங்கள் கோரிக்கைகள் மே 3-ந் தேதிக்குள் தீர்க்கப்படாவிட்டால் மே 4-ந்தேதி நடு இரவிலிருந்து ஸ்டிரைக் செய்ய போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கின்றனர்.

## விமானத்தின் விரைவு...




ஒரு மணிக்கு 650 மைல் வேகத்தில் இப்போது ஜெட் விமானங்கள் (வானூர்தி) பறக்கிறது. அமெரிக்கர்கள் இப்போது இவ்விமானங்களையே அதிக அளவு உற்பத்திச் செய்கின்றனர்.

## தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

16-4-50

கரியாப்பட்டணம்:—என். வி. நடராசன்.
தென்கோவை:—ஆசைத்தம்பி. அ. ச. நடராசன், பி. பாலசுந்தரம்
பொள்ளாச்சி:—எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம்.

## இனி நடப்பவை

வாணியம்பாடி:—16—4—50 மாலை தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் தோழர் எம். பி. சத்தியவர்கள் தலைமையில் நடைபெறும் அதுபோது கழக உறுப்பினர்கள் யாவரும் தவறாமல் ஜெரியபேட்டைடி. சாமிநாதன் இல்லத்திற்கு வர வேண்டுமாய் கோரப்படுகிறது.

* * *

ஏழாயிரம்பண்ணை:— தி. மு. கழகத்தின் சார்பில் 16—4—50 அன்று ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். இதுபோது தோழர்கள் எம். எஸ். இராமசாமி, இளஞ்செழியன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள் "என். எஸ். கே. வாசகசாலை" திறப்புவிழாவும் நடைபெறும்.

* * *

சென்னை, குளை:—மக்கள் மறுமலர்ச்சி மன்றம் சார்பில் 16—4—50 அன்று காலை தோழர் அ. இ. பார்த்தமனுர் அவர்கள் திருக்குறளின் "தவம்" என்னும் பொருள் பற்றிப்பேசுவார். இடம், குளை வாத்தியார் கந்தம் பிள்ளை தெரு, நகராண்மைக் கழகப்பள்ளி.

* * *

தேனும்பேட்டை, சென்னை:— 15—4—50 அன்று மாலை காங்கிரஸ் மைதானத்தில், நாடகக் கழகத்தின் சார்பில், 'பதி பக்தி' என்னும் நாடகம் மாலை 6-மணிக்கு நடைபெறும். தோழர்கள் கேசவன் டி. எஸ். பாலையா, மணி ஆகியோர் நடிப்பார்.

* * *

ஜோலார்பேட்டை:— 16.4.50 அன்று காலை இவ்வூரில் விவசாயிகள் சங்கம் ஒன்று தோழர் வி. பார்த்தசாரதியவர்கள் தலைமையில் திறுவப்படும். விழா, சினிமா தியேட்டர் அருகில் உள்ள கட்டிடத்தில் நடைபெறும் தோழர் வி. என். தத்தப்பன் சொற்பொழிவாற்றுவார்.

* * *

பொன்னேரி தாலுக்கா பழவேற்காடு:—மீன் பிடிப்போர் கிளைச்சங்கம், திறப்பு விழா, கூனங்குப்பத்தில் 16—4—50 மாலை தோழர் எஸ். ஆர். சாண்டோ தலைமையில் நடைபெறும். அதுபோது தோழர் என். ஜீவரத்தினம் சங்கத்தைத் திறந்து வைப்பார். தோழர் கே. குப்புராஜு சங்க மீன் கொடியை ஏற்றி வைப்பார். தோழர்கள் லட்சுமிநாராயணன், கே. என். சண்முகனுர், என். என். நாதன் மற்றும் பலர் பேசுவார்கள்.

* * *

எழுமினூர்:— வாசுதேவனூர் உயர்நிலைப் பள்ளி மாணவர் கழக ஆண்டு விழா (16—4—50) அன்று மாலை வித்துவான் தோழர் மா. இராசமாணிக்கனுர் தலைமையில் நடைபெறும். அவ்வமயம் க. அப்பாதுரை, எம். ஏ. எல். டி. விழாவைத் துவக்கிவைப்பார். ம. பொ. சிவஞானம் சொற்பொழிவாற்றுவார்.

* * *

வண்ணைபம்பதி, சென்னை:— திருப்பூர் குமரன் வாசகசாலையின் சார்பில் 16—4—50 ஞாயிற்றுக்கிழமை காலை பள்ளிச் சிறுவர்கள் பலர் உட்பட தொண்டர்கள் பலரும் தோழர் வி. சுந்தரமூர்த்தி செட்டியார் அவர்கள் தலைமையில் வீதி தோறும் சென்று சுகாதாரப் பிரசாரம் செய்வர்.

10-மணி முதல் 12-மணி வரை தோழர் பண்டித வித்துவான் மா. பொன். இராமநாதஞ் செட்டியார் அவர்கள் நீதிநெறி விளக்க வகுப்பு நடத்துவார்.

* * *

வேலூர்:—திருவள்ளுவர் சாத்தமிழ்க் கழகக் கூட்டம் 16-4-50 ஞாயிறு காலை கலாஸ் அஸ்திரி தெருவிலுள்ள, நகர தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும், அவ்வமயம் பல தோழர்கள், "வருங்காலம்" என்பதைப் பற்றிப் பேசுவார்கள்.

* * *

ஆம்பூர்.— 16—4—50 ஞாயிறு காலை தி. மு. க. செயற்குழுக் கூட்டம் தோழர் அழகாடி மண்டியில் நடைபெறும்.

* * *

கோவை:— 16-4-50 ஞாயிறு காலை 10-மணிக்கு கழகக் கட்டிடத்தில் வாராந்திர சொற்பயிற்சிக் கூட்டம் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் முன்னிலையில் நடைபெறும்.

* * *

சேங்கம், திருவாலக்கார:- தி. மு. க. செயற்குழுக் கூட்டம் கூடி, பல முக்கியமான விஷயங்களைப் பற்றி ஆலோசிக்கவேண்டி, 16—4—50 ஞாயிறு அன்று மாலை, இவ்வூர் தோழர் சி. வடிவேலு அவர்கள் மாடியில் நடைபெறும்.

* * *

அம்பலூர்:— 16-4-50 ஞாயிறு மாலை இவ்வூர் விவசாயிகள் சங்கச் சார்பில் தோழர் இ. எஸ். சௌந்திராசன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் வி. என். தத்தப்பன், கி. அப்பாதுரை, குல்லைக் கொண்டை, எம். வி. வடிவேல், க. செஞ்சேரழன், டாக்டர் நாதமுனி ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

## இந்தியா-பாகிஸ்தான் வர்த்தக முட்டுக்கட்டை

புதுடில்லி, ஏ. 14—

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே வார்த்தைகள் சீக்கிரமே ஆரம்பமாக விருக்கின்றன.

இவ்விரு நாடுகளிடையேயுள்ள வர்த்தக முட்டுக்கட்டையை தீர்க்கவும் பண்டமாற்று விஷயமாக ஒரு உடன்படிக்கை ஏற்படவும் இம்மாநாட்டில் வழி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாகிஸ்தான் ரூபாய் பரிவர்த்தனை விகிதம் குறித்து இதில் ஆலோசிக்கப்படமாட்டாது என்றும், சர்வதேச நாணய நிதி இவ்விஷயமாக தன் முடிவை அடுத்த மாதம் தெரிவித்துவிடும் என்றும் கூறப்படுகிறது. இப்பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக மந்திரி காரியாலய வட்டாரத்தினரிடம் நம்பிக்கை காணப்படுகிறது.

## இராக்கில் 'பறக்கும் தட்டு'

பாக்தாத், ஏ. 14—

இராக்கில் கிர்காக் பிரதேசத்தில் ஹாவேன் கிராமத்தின் மீது 'பறக்கும் தட்டு' காணப்பட்டதாக செய்தி கிடைத்திருக்கிறது. இந்த பறக்கும் தட்டு ஒளிவிடும் வட்டமாகவும் இருந்ததுடன் மிகத்தாழ்வாகவும், வெகு வேகமாகவும் சென்றதாக இதைக் கண்ட கிராமவாசிகள் கூறுகின்றனர்.

## திருப்பத்தூர் பொதுக்கூட்டம்

திருப்பத்தூர், ஏ. 10—

16 4-50-ந் தேதி வரும்படி தோழர் அண்ணுதுரை அவர்கள் வரஇயலாது என்று 4—4—50-ந் தேதி கடிதம் மூலம் அறிவித்துவிட்டபடியால், அன்று கூட்டம் நடைபெறாது. மறு தேதியில் கூட்டம் நடத்தப்படும். தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

## 'அறப்போர்'

நாகர் கோவில், ஏ. 4—

நாஞ்சில் மாவட்டக் கழகத் தோழர்களின் ஆதரவாலும், பொதுச் செயலாளர் தோழர் வி. எம். ஞான அவர்களின் ஒத்துழைப்பாலும் தோழர் கிரவாக ஆசிரியர் பி. கணபதி அவர்களைக் கொண்டு "அறப்போர்" என்னும் மாதமிருமுறை பத்திரிகை வெளிவரவிருக்கிறது. திராவிட இயக்க கருத்துக்களைத் தாங்கி வெளிவரும் எனத் தெரிகிறது.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMeri Chetty Street, Madras-1.